# பொன்னையொத்த பத்து

1. பொன்போன்ற திருவண்ணாமலையில் தாய்போன்று அருளுடைய குருவாகி, மின்னல் போன்ற பிரகாசம் மிகுந்த உண்மையறிந்த ரமண வேதியனை கண்டவர்களது அகந்தை அழிந்து போகும்.

2. ஆதியான வேதியனே! அன்பே வடிவாகி ஜோதி சொரூபமான அண்ணாமலைக்கு வந்தவனே! ஆத்ம நீதியை ஓதுகின்ற ரமணனே! தூயவா! நான் நற்கதி பெறும் வழியை என் காதில் உபதேசிப்பாயாக.

3. பஞ்ச பூதத்தில் அடங்காத தூயவன்! மேகம் சூழ்ந்த விருபாக்ஷகுகையில் பஞ்சுபோன்ற தனது திருப்பாதங்களோடு சென்று அடைந்தவன், செம்மையான ஆனந்தத்தை உண்டாக்கும் ரமணன், உண்மையின் வடிவினன்.

4. மண்ணும், நீரும், நெருப்பும், விண்ணும், காற்றும் ஆகிய பஞ்ச பூதங்களிலும் விளங்கும் ரமணனே எண்ணமும், ஐயமும், எல்லையும் அற்ற என் உயிருக்கு உயிரானவன்! அவன் என் காதலன் ஆவான்.

5. திருவண்ணாமலையில் வாழும் அழகன் ரமணன் எனக்கு அமுதம் போன்றவன். கருணையே வடிவாக வாழும் கடவுளாகிய அவன் காண்போர்க்கு ஞானமே வடிவான அஸ்தமனமற்ற சூரியன், அவன் தனதன்பர்களுக்கு பொருளும் மற்றும் பல நலமும் தரும் பரிபூரண ஞான சூரியன்.

ஸ்ரீ

# பொன்னையொத்த பத்து

*1.* **பொன்னை யொத்த** பொருப்புரு சோணையில்
அன்னை யொத்த வருட்குரு வாகிய
மின்னை யொத்த ரமணமெய் வேதியன்
றன்னைக் கண்டவர் தம்மை மறப்பரே.

*2.* ஆதி வேதிய னன்புரு வாகியோர்
ஜோதி மாமலை சோணையில் வந்தவா
நீதி யோது ரமண நிரஞ்ஜனா
காதி லோது கதிபெறு மார்க்கமே.

*3.* பஞ்ச பூதத் தடங்கிடாப் பாவனன்
மஞ்சு றுங்குகை மாவிரு பாக்ஷியிற்
பஞ்சு தங்கு பதத்துட னண்ணினான்
செஞ்சொ லின்ப ரமணமெய்த் தேசிகன்.

*4.* மண்ணு நீரும் வளர்ந்தெழு தேயுவும்
விண்ணுங் காலு நுழைந்து விளங்கிடும்
எண்ணுஞ் சங்கையு மெல்லையு மின்றிய
கண்ணுக் காவி ரமணனென் காதலன்.

*5.* அருணை வாழு மழக னமுதனென்
கருணை வாழுங் கடவுளன் காட்சியான்
தருண ஞான சதோதய சூரியன்
பொருண லந்தரு பூரண போதகன்.

6. பிரம்மனும், திருமாலும் மிக விரைவுடன் தேடி ஓடியும் காணாது அவர்களுக்கு அதீதமாக விளங்குபவன், நாம் காணும்படி அவன் ஓங்கி விளங்கும் அண்ணாமலையை கொஞ்சி குலாவி நிற்கின்றான். என் நெஞ்சினுளும் அந்த ரமணன் நிறைந்துள்ளான்.

7. வாரும் வாரும் ரமண மகாமுனிவரே! தாரும் தாரும் அருளை என்று பலரும் வேண்ட அண்ணாமலையில் விளங்கும் ரமணன், கேட்கும் வரம் அனைத்தையும் தருபவன்! மேகம் மழை பொழிவதுபோல் அவனருள் அனைவரையும் அடைகின்றது.

8. என்றும் அழியாது இன்பம் தரும் பாடல்களால் துதிக்கப்படுபவன். சந்தேகத்திற்கு இடம் இன்றி எங்கும் நிறைந்து ஒளிவிடும் ஞான சூரியன் கங்கையை தலையில் தாங்கிய-சிவசொரூபமே தானாக விளங்குகின்றவன். அவனே அண்ணாமலையில் வீற்றிருக்கும் இறைவன் ரமணன்.

9. எல்லா திசைகளில் வசிப்பவர்களும், அன்பர்களும் வந்து இறைவா இறைவா என்று தொழுது அந்த ரமணனைப் புகழ்வார்கள், முக்தி சொரூபனும் அந்த ஆனந்த மௌன சொரூபனுமான ரமணனை ‘‘நீயே என்றும் அழியாதவன் அறிவானவன் (சத் சித் சொரூபன்)’’ என்று யாவரும் உணர்ச்சி பொங்கத் தொழுவார்கள்.

10. வாழ்க வாழ்க! ரமண மகாகுரு வாழ்க! வாழ்க அண்ணாமலை! வாழ்க வேங்கடன் வாயிலிருந்து சொல்லும் பாடல்கள்! பலஊழிக்காலம் எல்லா அன்பர்களும் வாழ்கவே.

*6.* கஞ்சன் மாலுங் கடிதெழுந் தோடியும்
மிஞ்சி நின்று மிளிரும் பொருப்பிடைக்
கொஞ்சி நின்று குலவுவ தன்றியும்
நெஞ்சி னுள்ளும் ரமண னிறைந்தனன்.

7. வாரும் வாரும் ரமண மகாமுனி
தாருந் தாரு மருளெனத் தாழ்ந்திட
ஆருங் கோரும் வரம தளிப்பவன்
காரு ளூறிக் கசிந்திடு மாரியான்.

*8.* தங்கு மின்பந் ததும்பிடு பாடலான்
சங்கை யின்றி ஜகத்தொளிர் ஞானியான்
கங்கை தங்கு கடவு ளுருவினன்
இங்கு தங்கு மிறைவன் ரமணனே.

*9.* எத்தி சையரு மன்பரு மெய்தியே
அத்த னத்த னெனத்தொழு தேத்துவார்
முத்த னானந்த மோன ரமணனே
சத்துச் சித்தெனத் தாவித் தொழுவரே.

*10.* வாழி வாழி ரமண மகாகுரு
வாழி வாழி யருண மகாகிரி
வாழி வேங்கடன் வாய்சொலும் பாடல்கள்
வாழி யூழிதோ றன்பர்கள் வாழியே.